2013 மே 7]

என்கின்ற மஹாமக மந்திரத்தை உச்சரிப்பதன் பலனாக மாசற்ற இறைவனை அடையலாம் என்பது கீதையின் வாக்கு. கேட்டதையெல்லாம் வாரி வழங்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணையான பார்வைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோரிக்கை மனுவை அந்தப் பகுதி மக்களுடைய சார்பாக சமர்ப்பித்தபோது அந்த இடத்திற்கு மாற்றாக இன்னோர் இடத்தை தேர்வு செய்து அங்கு பணிமனை அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தொகுதி மக்களின் சார்பாகக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 422, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

422—

திருக்கோயில் திருப்பணி

***14424—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி வட்டம், காமக்கூரிலுள்ள அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கல்லில் வார்த்த தெய்வம் கருணை புரிய நாளாகும் என்றே, பொன்னில் வார்த்த தெய்வமாய், தமிழ் பூமிக்கு வந்த நம் தமிழர் குல சாமியாம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தாலே, அனைத்துத் திருக்கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்து

குடமுழுக்கு நடத்திட ஆணையிட்டு, காக்கும் தெய்வங்களையும் காத்து நிற்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பும் முன்னரே, அப்பகுதி மக்களின் எண்ணங்களை அறிந்து, ஆரணி வட்டம், காமக்கூர் அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயிலைப் பழுதுபார்த்து புனரமைக்க 13-வது நிதி ஆணையத்தின் மூலமாக ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மதிப்பீடு அங்கீகாரம் வழங்கி, 13-12-2011 அன்று பணிகள் துவங்கப்பட்டன. திருக்கோயிலின் இராஜகோபுரம், மதிற்சுவர், பெருமாள் சன்னதி, தாயார் சன்னதி ஆகியவற்றைப் பழுதுபார்த்து புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 80 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சிய பணிகளான சுவாமி சன்னதி முன்மண்டபம். பூச்சு வேலை மற்றும் வர்ண வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இத்திருக்கோயிலின் திருப்பணிகள் அனைத்தும் விரைவில் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், வரும் ஆவணி மாதம் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடமுழுக்கு செய்யக்கூடிய நிலையிலே அந்தக் கோயில் இருப்பது உண்மைதான். குடமுழுக்கு நடத்தவுள்ளதற்காக முதலிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, அங்கு காமகோடியில் இருக்கக்கூடிய சந்திரசேகர சுவாமி கோயிலுக்கு திருத்தேர் ஒன்று வழங்க வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கை இருக்கிறது. மேலும், மாண்புமிகு முதலமைச்சருடைய கடந்த 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே ஆரணி வட்டம், தேவிகாபுரம் கனகபுரீஷ்வரர் கோயிலுக்கு அதன் முழுத் தொகையான ரூ.25 இலட்சம் தந்து,

2013 மே 7]

ஒரு திருத்தேரினை வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, அந்த மக்கள் பெரியநாயகி அம்மனுக்கும் ஒரு திருத்தேர் வழங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, விரைவிலே அந்தக் கோயிலுக்கு திருத்தேர் வழங்குவதற்கான பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகராட்சியிலே இருக்கக்கூடிய தசரத மகா சக்கரவர்த்தி கட்டிய புத்திர காமேட்டீஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி செய்து தரவேண்டுமென்று நகராட்சி மக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதேபோல, கடந்த ஆண்டு இதே மாதத்திலே ஆரணி நகராட்சியிலே இருக்கக்கூடிய கைலாசநாதர் கோயில் திருத்தேர் விபத்து ஏற்பட்டு 5 பேர் உயிரிழந்தார்கள். அவர்களுக்கு அன்றையதினமே நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. அந்தத் திருத்தேர் இன்றைக்கும் உடைந்த நிலையிலே இருக்கின்றது. அந்தத் திருத்தேரையும் மாற்றி, உடனடியாக புதுத் தேர் வழங்கி, ஆலயப் பயன்பாட்டுக்கு விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மே 7

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து வருடத்திற்கு 1,006 கோயில்கள் என்ற அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள், திருத்தேர்கள், திருக்குளங்களெல்லாம் புனரமைக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துக் கோயில்களிலும் குடமுழுக்கு செய்திட ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்தவகையிலே, அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை விரைவிலே பரிசீலனைக்கு எடுத்து, செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 423, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

423—

வருவாய்க் கோட்டத்தினைப் பிரித்தல்

***26231**—**திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள்.